**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR</u>**

CC.No.140/2016
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : மூக்கையா | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் :குருசாமி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

<u>17.09.2025</u>
(A1 and A3 absent. Petition U/s.317 crpc filed and allowed).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் தற்போது பொதிக்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அசா.ஆ.1).** நான் பொதிக்குளம் கிராமத்தில் இருக்கும்போது சுமார் இரவு 08.00 மணியளவில் அர்ஜுணன் என்பவரும், கரந்தமலை என்பருக்கும் சண்டை நடைபெற்றது சம்மந்தமாக சம்பவ இடத்திற்கு போலிசார் வந்து விசாரித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். சம்பவம் நடந்து 10 வருடம் ஆனதால் போலிசார் அங்கு என்ன செய்தார்கள் என்று நினைவில் இல்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடைபெற்ற எத்தனை நாட்கள் கழித்து கையொப்பம் செய்தேன் என்றால் சம்பவம் நடந்த அன்றே கையொப்பம் செய்தேன். நான்

கையொப்பம் செய்தபோது நேரம் இரவு சுமார் 8.00 மணி இருக்கும். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது என்றால்சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் எழுதப்பட்டிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்று நினைவில் இல்லை. வழக்கு சம்மந்தமாக ஒரே ஒரு கையொப்பம் தான் செய்தேன். நான் போலிசார் வரைந்த வரைபடத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் எனக்கு எதுவும் நினைவில் இல்லை. நான் போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR</u>**

CC.No.140/2016
Prosecution witness.06

| | |
|---|---|
| பெயர் : ஜெயக்குமார் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : ராஜசேகர் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

<u>17.09.2025</u>
(A1 and A3 absent. Petition U/s.317 crpc filed and allowed).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் தற்போது மதுரை மாவட்டம் திருமங்களம் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.02.2015 ம் தேதி 20.00 மணிக்கு நான் இளஞ்செம்பூர் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது பொதிக்குளம் கிராமத்தை சேர்ந்த குருந்தாயி, க.பெ.கரந்தமலை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்றேன். **(புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**.

**2)** புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.12/2015 இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**.

**3)** பின்பு அன்றைய தினமே 20.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மூக்கையா மற்றும் சண்முகவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை

பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).**

**4)** அன்றைய தினமே சம்பவயிட சாட்சிகளான குருந்தாயி, கரந்தமலை, அழகுமலை, ஜெயராஜ், வள்ளி, கருப்பையா, ராமகிருஷ்ணன், மூக்கையா மற்றும் சண்முகவேல் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை கிளை மூலம் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. வழக்கில் தடயப்பொருட்கள் கைப்பற்றப்படவில்லை.

**5)** பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வழக்கு சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்த இடம் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதி என்றால் சரிதான். சம்பவம் விவசாய இடத்தில் நடைபெற்றுள்ளது. எதிரிகளுக்கும், புகார்தாரர் குடும்பத்தாருக்கும் இடப்பிரச்சனை சம்மந்தமாக உரிமையியல் வழக்கு நடைபெற்று வருகிறது என்ற விபரத்தை புலன்விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

இவ்வழக்கில் எதிரிகள் புகார்தாரருக்கு எதிராக புகார் கொடுத்து காவல்நிலைய குற்ற எண்.11/15 ன் கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு எதிர் வழக்கு இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கில் காயம்பட்டதாக சொல்லப்படும் நபர் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிர் வழக்கில் எதிரிகள் கொடுத்த புகார் மீதான வழக்கில் காயம்பட்ட நபர்கள் குறித்த விபரங்கள் ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

காவல்நிலைய படியான எண்.588A ன் படி எதிர் எதிர் வழக்கில் குற்றம் இழைத்த நபர்களை கண்டறிந்து அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் புகார்தாரர் கொடுத்த புகாரினையும், எதிரிகள் கொடுத்த புகாரினையும் சரிவர விசாரணைசெய்யாமல் எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கில் இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.